**செய்தி வெளியீடு எண்: 544** **நாள்: 16.08.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (16.8.2018) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறையின் சார்பில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டத்தின் கீழ், திருவாரூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்ட செயலாக்க அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், நாகப்பட்டினத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்ட செயலாக்க அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்து, இத்திட்டப் பணிக்காக நீர்வள ஆதாரத் துறை பொறியாளர்களுக்கு 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கார் மற்றும் 16 ஜீப்புகளையும் வழங்கினார்கள். மேலும், பொதுப்பணித் துறையில் 95 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிடும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

காவிரி டெல்டாவில் தட்பவெப்பநிலை மாறுபாடுகளுக்கு ஏற்ப ஆறுகள் மற்றும் வாய்க்கால்களை மேம்படுத்தும் வகையில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டத்தின் கீழ், திருவாரூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்ட செயலாக்க அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்ட செயலாக்க அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

காவேரி கழிமுகப் பகுதியிலுள்ள கீழ்வெண்ணாறு அமைப்பிலுள்ள பாசன கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மீளகட்டுதல் மற்றும் புனரமைத்தல் ஆகிய பணிகளை மேற்பார்வையிட, திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய கோட்டங்களில் உள்ள பொறியாளர்கள் ஆகியோரின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு கார் மற்றும் 16 ஜீப்புகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 2 ஓட்டுநர்களுக்கு அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

பணிக்காலத்தில் காலமான 93 பொதுப்பணித் துறை பணியாளர்கள் மற்றும் பணிக்காலத்தில் மருத்துவச் சான்றிதழின் பேரில் இயலாமையால் ஓய்வு பெற்ற (Medical Invalidation Retirement) 2 பொதுப்பணித் துறை பணியாளர்கள், என மொத்தம் 95 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், பதிவுரு எழுத்தர், பாசன உதவியாளர், உதவியாள் மற்றும் தோட்டக்காரர் ஆகிய பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.எம். பக்தவத்சலம், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.எஸ். மனோகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.8.2018**